Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**
தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654

# தினத்தளம்
PRGI NO: TNBIL/25/A3556
நடுநிலை நாளிதழ்
DHINATH DHALAM Tamil & English daily Paper
ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,
நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

**செய்தியாளர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை
☎ 94440 82959

மலர் Volume : 01 | இதழ் Issue : 019 | ஞாயிற்றுக்கிழமை Sunday | 19.04.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# "தமிழகத்தை டெல்லியில் இருந்து ஆள நினைக்கும் பாஜக முயற்சி ஒருபோதும் பலிக்காது" பொன்னேரியில் ராகுல் காந்தி பேச்சு



பொன்னேரி: "முற்காலங்களில் ராணுவம் மூலம் போர்தொடுக்கப்பட்டது. ஆனால், தற்போது பாஜக ராணுவம் இல்லாமல் போரை தொடுக்கிறது. தமிழ் மொழி, கலாச்சாரம், வரலாற்றை அவர்கள் அழிக்க நினைக்கின்றனர். அது ஒருபோதும் நடக்காது என காங்கிரஸ் மூத்த தலைவரும், மக்களவை எதிர்க்கட்சி தலைவருமான ராகுல் காந்தி ஆவேசமாகபேசினார்.

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரியில் இண்டியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து ராகுல் காந்தி இன்று பிரச்சாரம் மேற்கொண்டார். அப்போது பேசிய அவர், "பெண்கள் இடஒதுக்கீடு மசோதாவை தொகுதி மறுவரையறை மசோதாவுடன் இணைத்து, தமிழ்நாட்டின் பிரதிநிதித்துவத்தை குறைக்க பாஜக சதித்திட்டம் தீட்டியது. அதை நாம் போராடி முறியடித்தோம்.

நாடாளுமன்றத்தில் தென் மாநிலங்களின் குரலை நசுக்க பாஜக முயற்சிக்கிறது. பாஜக, டெல்லியில் இருந்து தமிழ்நாட்டை ஆளப் பார்க்கிறது. அரசியலமைப்பை பலவீனப்படுத்த அவர்கள் திட்டமிட்டனர். தமிழ் மொழி, கலாச்சாரம், வரலாற்றை அழிக்க நினைக்கிறது பாஜக.

நாங்கள் எப்போதும் அதை அனுமதிக்க மாட்டோம். பாஜக, மக்களை புறக்கணிக்கிறது; அவர்களுக்கு தமிழ் மக்கள் யார் என புரியவில்லை. தமிழ் மக்களுக்கு ஆயிரமாயிரம் ஆண்டு கால வரலாறு உள்ளது. தமிழ்நாட்டுக்கு வந்ததை பெருமையாக கருதுகிறேன், கடந்த சில ஆண்டுகளாக தமிழக மக்களுடன் ஒரு பிணைப்பை ஏற்படுத்தியுள்ளேன். எனது இதயத்தில் தமிழக மக்களுக்கென்று தனி இடம் உண்டு.

தமிழ்நாட்டை, தமிழ் மொழியை, கலாச்சாரத்தை பாஜக, ஆர்எஸ்எஸ் தாக்கும்போது என்னை தமிழனாகவே உணர்கிறேன். தமிழ்நாட்டு மக்களின் மீதும் தமிழ் மொழியின்மீதும் அன்பு அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. நான் தமிழ்நாட்டில் பிறக்காவிட்டாலும், என் குடும்பம் தமிழ்நாட்டிலிருந்து வராவிட்டாலும் தமிழ்மண்ணைசேர்ந்தவனாகவே உணர்கிறேன். பாஜக மற்றும் ஆர்.எஸ்.எஸ்ஸால் எப்போதும் தமிழ்நாட்டை தொட முடியாது. எங்கள் கூட்டாளிகளை நாங்கள் சமமாகபார்க்கிறோம். திமுகவைப் போன்று அதிமுகவும் நீண்ட பாரம்பரியத்தைகொண்டிருந்தது. ஆனால் அந்த அதிமுக தற்போது அழிந்து விட்டது. தமிழ்நாட்டின் எதிர்காலத்தை தமிழ்மக்கள்தீர்மானிக்க வேண்டும் என நாங்கள் நினைக்கிறோம். பெரியாரின் கொள்கைகளை ஆர்எஸ்எஸ், பாஜக நசுக்கப்பார்க்கிறது.

அவரின் சமூக நீதிக் கொள்கைகளை அழிக்கப் பார்க்கிறார்கள். இந்தியாவையே 2, 3 கம்பெனிகளின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர அவர்கள் நினைக்கிறார்கள். எனவே, முதலில் இது ஒரு கொள்கைப்போர். அதன் பிறகே இது அரசியல் போர்.

முற்காலங்களில் ராணுவம் மூலம் போர் தொடுக்கப்பட்டது. ஆனால், தற்போது பாஜக ராணுவம் இல்லாமல் போரை தொடுக்கிறது. தமிழ் மொழி, கலாச்சாரம், வரலாற்றை அவர்கள் அழிக்க நினைக்கின்றனர். அது ஒருபோதும் நடக்காது இவ்வாறுஅவர்நினைக்கிறார்.

# உலக நாடுகள் ரஷ்ய எண்ணெய் வாங்குவதற்கான அனுமதியை மேலும் ஒரு மாத காலம் நீட்டித்தது அமெரிக்கா



வாஷிங்டன்:

சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விநியோகத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ள நிலையில் உலக நாடுகள் ரஷ்ய நாட்டின் கச்சா எண்ணெய் மற்றும் பெட்ரோலிய பொருட்களை வாங்குவதற்கு அனுமதி அறிவித்திருந்தது அமெரிக்கா. தற்போது அதை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீட்டித்துள்ளது அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தலைமையிலான அரசு நிர்வாகம்.

கடந்த பிப்.28-ம் தேதி அமெரிக்கா, இஸ்ரேல் இணைந்து ஈரான் மீது தாக்குதல் நடத்தியது. இதற்கு ஈரானும் பதிலடி தந்தது. தற்போது அமெரிக்கா மற்றும் ஈரான் இடையே இடைக்கால போர் நிறுத்தம் ஏற்பட்டுள்ளது. போர் சூழலால் ஹார்முஸ் ஜலசந்தி வழியாக சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விநியோகம் பாதிக்கப்பட்டது. இந்த தட்டுப்பாட்டை குறைக்கும் வகையில் இந்தியா உட்பட சர்வதேச நாடுகள் கடலில் உள்ள ரஷ்ய கச்சா எண்ணெய் மற்றும் எரிபொருளை வாங்கிக் கொள்ளலாம் என அமெரிக்கா தெரிவித்தது.

ரஷ்யாவிடம்இருந்து எண்ணெய் வாங்கும் நாடுகளுக்கு கூடுதல் வரி விதித்தது அமெரிக்கா. இந்த வரி விதிப்பு இந்தியா மீதும் சுமத்தப்பட்டது. அதன் பின்னர் ரஷ்ய கச்சா எண்ணெய் வாங்குவதை இந்தியா நிறுத்திக் கொண்டது. இத்தகைய சூழலில் மேற்காசிய போர் காரணமாக ரஷ்ய கச்சா எண்ணெய் வாங்க முப்பது நாட்கள் விலக்கு அறிவித்தது அமெரிக்கா. அந்த விலக்கு ஏப்.11-ம் தேதியுடன் நிறைவடைந்தது. தற்போது அதை மேலும் ஒரு மாத காலம் நீட்டித்துள்ளது அமெரிக்கா.

வெள்ளிக்கிழமை அன்று அமெரிக்ககருவூலஅமைச்சகம் முக்கிய அறிவிப்பு ஒன்றை வெளியிட்டது. அதில் ரஷ்யா கச்சா எண்ணெய் உடன் கடல் பயணத்தில் உள்ள சரக்கு கப்பல்களில் இருந்து உலகநாடுகள் கொள்முதல் செய்ய கடந்த மாதம் அனுமதி அளிக்கப்பட்டது.

தற்போது அந்த அனுமதி மே 16 வரை நீட்டிக்கப்படுகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகள், ரஷ்ய கச்சா எண்ணெய் வாங்குவதில் சிக்கல் இருக்காது.

# "எனது மரணத்துக்காக ஒரு கூட்டம் காத்திருப்பு" பாமக நிறுவனர் ராமதாஸ் கடும் வேதனை

விழுப்புரம்: கடந்த சில தினங்களுக்கு முன் சேலம் பிரச்சாரக் கூட்டத்தில் மயங்கி விழுந்த பாமக நிறுவனர் ராமதாஸ்சென்னைஅப்பலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, உடல்நலம் சீராகி தைலாபுரம்திரும்பினார். அங்குள்ள தனது இல்லத்தில் நேற்று அவர் தபால் வாக்கு செலுத்தினார்.

பின்னர் ராமதாஸ் செய்தியாளர்களிடம் கூறியது 'நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்' என்று இருந்த எனது குடும்பத்தை சிதைத்த பெருமை அன்புமணியின் மனைவி சவுமியாவைச் சேரும். என் பேத்திகளையும் மயக்கி, மாற்றி விட்டார். 'என்னை குல தெய்வம்' என்று பேசி விட்டு, அவரிடம் இருக்கும் பணத்தை வைத்து, என்னுடன் இருந்த கட்சியின் முன்னோடிகளை பொய் பேசும் கூடாரத்துக்கு அழைத்துச் சென்று விட்டார். உடல் நலம் சரியில்லாமல் நான் மருத்துவமனையில் இருந்தபோது, 'நான், பார்க்க அனுமதிக்கவில்லை' என்று பொய்யர்கள் சொல்கின்றனர். அவர் பெற்ற பிள்ளைகளும் பொய் சொல்வதில் வல்லவர்கள். பாசத்தை வேரறுத்து குளிர் காய்கின்றனர் என்றார்.

அப்போது குறுக்கிட்ட அவரது மகள் ஸ்ரீகாந்தி, "மருத்துவமனையில் இருமுறை இருந்தபோது யாருமே வந்து பார்க்கவில்லை, போன் கூட செய்யவிலலை என்று கூறுங்கள்" என்று தந்தையிடம் கேட்டுக்கொண்டார். தொடர்ந்து பேசிய ராமதாஸ், "பொய்யர் த்தினர் என்னை வந்து பார்க்கவில்லை, போன் கூட செய்யவில்லை. ஆஞ்சியோ செய்த போது, தமிழகத் தலைவர்கள் அனைவரும் நலம் விசாரித்த போதும் கூட அன்புமணி மற்றும் அவரது குடும்பத்தினர் வந்து பார்க்கவில்லை. 'எனக்கு வயதாகிவிட்டது, செயல்பட முடியாது' என்று பொய்யர் கூட்டம் தொடர்ந்து கூறி வருகிறது. நான் தினசரி கால் முதல் தலை வரை அனைத்துக்கும் பயிற்சி செய்கிறேன். ஆரோக்கியமாக இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். அதேநேரத்தில் ஒரு வாரத்துக்கு பிரச்சாரம் செய்யக் கூடாது என்று அறிவுறுத்தியிருக்கினறனர். குழப்பத்தை ஏற்படுத்தி கட்சியை அபகரித்து விட்டார். 'எனக்கு மனநிலை சரியில்லை' என்று கூறுகிறார். என்னுடைய படத்தை அவர்கள் போடக்கூடாது என வழக்கு தொடரப்பட்டுள்ளது. பாமக பலவீனமடையாது" என்றார்.



**வரி விளம்பரங்கள்**

தினத்தளம்
DHINATH DHALAM
மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள்
கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் | ஆண்டு விழா
திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள்
ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன்
வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல்
தொடர்புக்கு : ☎ +919444082959

தொடர்ந்து பேசிய ராமதாஸ் மகள் வழி பேரன் முகுந்தன், "பிரச்சினை என்னிடம் இருந்து தொடங்கியதால், நான் பேசுகிறேன். எனக்கு எம்எல்ஏ சீட்டு தருவதாகவும், செலவை ஏற்றுக் கொள்கிறேன் என்றும் வாக்குறுதி அளித்திருந்தனர். இதற்கான ஆதாரம் உள்ளது. இப்போது நான், அரசியல் எதுவும் வேண்டாம், அய்யாவுடன் மட்டும் இருக்கிறேன். அவர்களோ அய்யாவின் முகம், பெயர் வேண்டும். ஆனால் அய்யா வேண்டாம் என்கின்றனர். 'குடும்பத்தை பிரித்து விட்டார்' என்று ஜி.கே.மணி மீது குற்றம் சொல்கின்றனர்.

அன்புமணி, சவுமியா ஆகியோரின் பணத்தாசை மட்டுமே குடும்பத்தை பிரித்தது. நான் நிறைய விஷயங்களை பேசினால், அவர்களால் வெளியே வர முடியாது. அன்புமணிக்கும், அவரது இரு மகள்களுக்கும் சவால் விடுக்கிறேன். என்னுடன் உண்மையை பேச தயாரா? எங்கு அழைத்தாலும் நான் வருகிறேன்.

2019,2020,2021,2024-ல் என்ன நடந்தது? என் அம்மா காலில் நீங்கள்தான் விழுந்தீர்கள். பாஜக என்னை எதையாவது செய்துவிடும் என என்னுடைய அம்மா காலில் விழுந்தது நீங்கள்தானே..! அதிமுகவின் முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகத்தை போனில் தொடர்பு கொண்டு, மறுநாள் காலை வரச் சொன்னது நான்தானே! அனைத்து நிகழ்விலும் உங்களுடன் நான் இருந்துள்ளேன்.

அய்யா நினைத்தபடி செயல்பட்டிருந்தால், ஆட்சி அதிகாரத்தில் பாமக இருந்திருக்கும். தன்னுடைய பிள்ளைக்காக சமரசம் செய்த காரணத்தால், பாமக அங்கீகாரத்தை இழந்துள்ளது. அய்யாவை நம்பி வன்னியர்கள் வந்தார்கள். நீங்கள் யாரை வேண்டுமானாலும் நம்புங்கள், அவர்களை நம்பாதீர்கள்" என்றார்.

சிறப்பாக பிரச்சாரம் செய்ய வேண்டும் என்று எண்ணினேன். முடியுமா என்று தெரியவில்லை. நமது பாமக வேட்பாளர்கள் மற்றும் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து பாட்டாளி சொந்தங்கள் அனைவரும் முழு ஆதரவு அளித்து வாக்களிக்க வேண்டும்.

பாமகவை என்னிடம் இருந்து அபகரித்து விட்டனர். எப்போது எனக்கு மரணம் வரும் என ஒரு கூட்டம் காத்திருக்கிறது. மகன், மருமகள், பேத்திகள் கூட அப்படி நினைக்கின்றனர். அன்புமணி நல்ல பிள்ளை இல்லை.

செய்திகள்
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# "உதயநிதியை ஒருபோதும் முதல்வர் வேட்பாளராக மக்கள் ஏற்க மாட்டார்கள்" பியூஷ் கோயல் பேச்சு



ஊட்டி: "தமிழககலாச்சாரம் மற்றும் பெண்களுக்கு எதிரான மனநிலை கொண்ட உதயநிதியை தமிழக மக்கள் ஒருபோதும் முதல்வர் வேட்பாளராக ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்," என மத்திய அமைச்சர் பியூஸ் கோயல் தெரிவித்துள்ளார்.

நீலகிரி மாவட்டம், ஊட்டி சட்டப்பேரவைத் தொகுதி பாஜக வேட்பாளர் போஜராஜனை ஆதரித்து பிரச்சாரம் மேற்கொள்ள மத்திய வர்த்தகத்துறைஅமைச்சர்பியூஷ்கோயல் இன்று ஹெலிகாப்டர் மூலம் ஊட்டி வந்தார். ஊட்டியில் உள்ள தனியார் ஹோட்டலில்,அவர் பல்வேறு தரப்பு சங்கங்கள் மற்றும் அமைப்புகளுடன் ஆலோசனை நடத்தினார்.

பின்னர், மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் கூறியதாவது; இந்தத் தேர்தல் எடப்பாடி பழனிசாமி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு ஒரு மிகப்பெரிய வெற்றியாக இருக்கும். எங்களது தலைமையின் கீழ் வரும் மே 4-ம் தேதி புதிய அரசு அமைந்து தமிழக மக்களுக்கு சேவை செய்யும்.

ஸ்டாலின் குடும்பத்தால் தமிழகத்தில் ஊழல் பெருகிவிட்டது. இது ஒரு சிறிய குடும்பம் அல்ல. மு.க.ஸ்டாலின், உதயநிதி ஸ்டாலின்,மருமகன் சபரீசன், சகோதரி கனிமொழி என ஒரே குடும்பத்தின் ஆட்சி இது. டாஸ்மாக் ஊழல், நில ஒதுக்கீடு ஊழல் என அனைத்துத் துறைகளிலும் ஊழல் மலிந்துவிட்டது.

தமிழக இளைஞர்கள் ஒரு அரசு வேலையைப் பெறுவதற்குக் கூட லஞ்சம் கொடுக்க வேண்டிய நிலை உள்ளது. இது தமிழக மக்களால் ஏற்றுக்கொள்ள முடியாதது. தமிழக கலாச்சாரம் மற்றும் பெண்களுக்கு எதிரான மனநிலை கொண்ட உதயநிதி ஸ்டாலினை தமிழக மக்கள் ஒருபோதும் முதல்வர் வேட்பாளராக ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். நான் செல்லும் இடமெல்லாம் மக்கள் கோபமாகஇருக்கிறார்கள். மு.க.ஸ்டாலின் உதயநிதியைத்துணை முதல்வராக்கிவிட்டு, இந்தத் தேர்தலுக்குப் பின் அவரை முதல்வராக்கத் திட்டமிட்டுள்ளார்.

இந்தஒருகுடும்பத்தின் ஊழல் மற்றும் மோசமான ஆட்சி விரைவில் முடிவுக்கு வரும். அதிமுக,பாஜக,பாமக,ஏஎம்எம்கே, தமிழ் மாநில காங்கிரஸ் மற்றும் இதர கூட்டணிக் கட்சிகள் ஒரு குடும்பமாக இணைந்து தமிழக மக்களுக்காக உழைக்கிறோம்.

இன்று நான் நீலகிரி மாவட்டத்தில் உள்ள இந்த அழகான ஊரில் இருக்கிறேன். எங்களது நீண்டகாலத் தொண்டர் போஜராஜன் இந்தத் தொகுதியில் 100% வெற்றி பெறுவார். அவர் 24 மணி நேரமும் மக்களுக்காக உழைக்கும் ஒரு அடிமட்டத் தொண்டர்.

எங்களது சகோதரர் வினோத் மற்றும் அதிமுக தொண்டர்களுடன் இணைந்து வெற்றிக்காகப் பாடுபடுகிறோம். தமிழகம் முழுவதும் இந்தக் கூட்டணி ஒற்றுமையாகச் செயல்படுவதால் வெற்றி நிச்சயம். மக்கள் திமுகவின் ஊழலை மறக்க மாட்டார்கள். அவர்களுக்கு ஒரு மாற்றம் தேவை, அந்த மாற்றத்தை அதிமுக தலைமையிலான கூட்டணி வழங்கும். இவ்வாறு அவர் கூறினார்.

# "அன்புமணியை ஆதரிப்பது ஆபத்து" ராமதாஸின் மகள் ஸ்ரீகாந்தி சீற்றம்





விழுப்புரம்: ராமதாஸின் மகள் ஸ்ரீகாந்தி, 'செயல் தலைவராக இல்லை, ராமதாஸின் மகளாக பேசுகிறேன்' என்று ஆவேசமாகபேசினார். "எங்களைத் 'துரோகி' என்கிறார். முதல் துரோகியே அன்புமணிதான். கட்சி மற்றும் அப்பாவின் பொருளாதாரத்தை அபகரித்துச் சென்றவர் அன்புமணி.

கட்சியில் அனைத்தையும் அனுபவித்தது அன்புமணி. எங்களுக்கு அரசியல் ஆசை எதுவும் இல்லை. அப்பாவுக்கும், அம்மாவுக்கும் துணையாக இருக்க வேண்டும் என்பதற்காக நாங்கள் உள்ளோம்.

'அப்பாவுக்கு ஏதாவது ஆனால் தொலைத்து விடுவேன்' என்று அன்புமணி பேசுகிறார். நான் கேட்கிறேன், 'யாரை தொலைச்சுடுவ' சமூக வலைதளத்தில் என் அப்பாவை தவறாக சித்தரித்து, அவமதிக்கின்றனர். அவரின் பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்துகின்றனர். அப்பாவின் தனிப்பட்ட வாழ்க்கையை குறிப்பிட்டு விமர்சிப்பவர்களுக்கு பதவியைக் கொடுத்து, அவர்களுடன் கட்டியணைத்து போட்டோ வெளியிடுகிறார். இவரெல்லாம் ஒரு பிள்ளையா?.

ஏதோ இப்போதுதான் 20 வயது பெண்ணை திருமணம் செய்துகொண்டு வந்தது போல் அப்பாவை கேவலப்படுத்தி வருகின்றனர். 45 ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்றது. என் அம்மாவின் சம்மதத்துடன்தான் அனைத்தும் நடந்தது. என் அம்மாவுக்கு அனைத்து விஷயமும் தெரியும்.

குற்றச்சாட்டு சொல்வதற்கு வழி இல்லாததால், 'அந்த அம்மாவால்தான் எல்லாம் நடக்கிறது' என்று பொய் சொல்கிறார். அப்பாவைப் பற்றி கட்சியினர் மத்தியில் தவறான எண்ணத்தை உருவாக்கி இருக்கிறார். எந்த குடும்பத்தில்தான் இது நடக்கவில்லை. தனிப்பட்ட வாழ்க்கையை பேசுவதற்கு யாருக்குமே தகுதியில்லை.

'அக்கா' என்று கூட என்னைப் பார்க்காமல், கேவலமான பதிவு செய்கின்றனர். அன்புமணி சொல்லிதான் இது எல்லாம் நடக்கிறது. பணம், பதவிக்காக நாங்கள் இல்லை. அப்பா, அம்மாவை சந்தோஷமாக வைத்திருக்க வேண்டும் என்பதால் உடன் இருக்கிறோம். அப்பாவுக்கு உடல் நிலை பாதிக்கப்படுவதற்கு காரணமே அன்புமணிதான். அப்பாவை தனிமைப்படுத்த வேண்டும் என 10 ஆண்டுகளாக திட்டம் போட்டுள்ளனர். கூடவே இருந்தும் இதுஎங்களுக்கு தெரியவில்லை.

மறைந்த திமுக தலைவர் கருணாநிதியின் மகன் ஸ்டாலின் பொறுமையாகஇருந்ததுபோல், உனக்கு பொறுமையாக இருக்க தெரியாதா..? எனக்கு அடுத்தது அன்புமணிதான் என அப்பா ஏற்கெனவே கூறியிருக்கிறார். அதற்குள் உனக்கு என்ன அவசரம்? நல்ல பிள்ளையாக இருக்க முடியாதவர், எப்படி நல்ல தலைவராக இருப்பார். இவரை ஆதரிப்பது ஆபத்து" என்றார்.

# வருமானவரி அதிகாரிகளின் கார்களில் வாக்காளர்களுக்கு வழங்க பணம் கடத்தலா? குற்றச்சாட்டின் பேரில் போலீஸார் விசாரணை



சென்னை: தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் தேதி நெருங்கி வருகிறது. இந்தச் சூழலில் வாக்காளர்களுக்கு அரசியல் கட்சியினர் பணப்பட்டுவாடா செய்வதைத் தடுக்க தேர்தல் ஆணையம் பல்வேறு தொடர் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

ஆனாலும் சில அரசியல் கட்சிகள், பல்வேறு நூதன வழிகளில் வாக்காளர்களுக்கு பணம் கொடுத்து வாக்கை கவர முயன்று வருவதாகக் கூறப்படுகிறது.

இதற்கிடையே, வருமான வரித் துறை அதிகாரிகள் பயன்படுத்தும் கார்கள் மூலம் வாக்காளர்களுக்கு கொடுப்பதற்காக பணம் கடத்திச் செல்லப்படுவதாக தகவல் அறியும் உரிமை செயற்பாட்டாளர் ஒருவர், ஆயிரம் விளக்கு தொகுதி தேர்தல் நடத்தும் அதிகாரி மற்றும் பாண்டி பஜார் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார்.

அந்த புகாரில், "வருமானவரித் துறை மற்றும் வருமானவரித் துறை புலனாய்வுப்பிரிவுக்காகஅதிகாரிகள் கார்களைவாடகைக்கு எடுத்து பயன்படுத்தி வருகின்றனர். அவர்கள் மஞ்சள் வாகன பதிவெண் கொண்ட கார்களை எடுக்காமல், வெள்ளை பதிவெண் கொண்ட கார்களை எடுத்துள்ளனர்.

மேலும் அந்த கார்களில் விதிகளை மீறி வருமான வரித் துறை என்ற பெயர் பலகையை வைத்தும் விதிமீறல்களில் ஈடுபட்டுள்ளனர். தற்போது தேர்தல் சமயத்தில் இதுபோன்றகார்கள் மூலம் சட்டவிரோதமாக பணம்கொண்டுசெல்லப்படுகிறது.

அந்த கார்களின் ஓட்டுநர்கள் தங்களை உயர் அதிகாரிகளைப் போல் காண்பித்துக் கொண்டு தேர்தலில் சட்டவிரோதப் பணத்தை விநியோகிப்பதில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த தனியார் கார்களை உடனடியாக தேர்தல் அதிகாரிகள் பறிமுதல் செய்ய வேண்டும். அதிகாரிகளுக்கு தெரியாமல் இது நடைபெற வாய்ப்பில்லை. எனவே, வருமான வரித் துறை அதிகாரிகளின் கார்களையும் தேர்தல் அதிகாரிகள் சோதனையிட வேண்டும்.

இந்த விவகாரத்தில் தேர்தல் ஆணையம் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த புகார் குறித்து தேர்தல் அதிகாரிகளும், போலீஸாரும் தனித் தனியாக விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தமிழகத்தில் நடப்பாண்டில் நாய்க்கடியால் 2 லட்சம் பேர் பாதிப்பு: ரேபிஸ் தொற்றால் 13 பேர் உயிரிழப்பு



சென்னை: தமிழகத்தில் நடப்பாண்டில் நாய்க்கடியால் 2 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். ரேபிஸ் நோய் தொற்றால் 13 பேர் உயிரிழந்துள்ளனர். தமிழகம் முழுவதும் சுமார் 25 லட்சம் தெரு நாய்கள் இருக்கலாம் என்று உத்தேச புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

சென்னை போன்ற பெருநகரங்களில் மட்டுமே தெருநாய்களுக்கு ஓரளவு தடுப்பூசி போடப்படுகிறது. கிராமப்புறங்களில் நாய்களுக்கு எவ்வித தடுப்பூசியும் போடாததால், நகரப் பகுதிகளைவிட நாய்க்கடி பாதிப்பு கிராமப்புறங்களில் அதிகம் உள்ளன.

கடந்த 2025-ம் ஆண்டில் நாய்க்கடியால் 6 லட்சத்து 25,700 பேர் பாதிக்கப்பட்டதில், 34 பேர் ரேபிஸ் நோய் தொற்று ஏற்பட்டு உயிரிழந்தனர். இந்நிலையில், இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் இது வரை 2 லட்சத்து 9 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் நாய்க்கடியால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

13 பேர் ரேபிஸ் நோய் தொற்று பாதிப்பு ஏற்பட்டு உயிரிழந்துள்ளனர். அதிகபட்சமாக சேலம் மாவட்டத்தில் 12,177, திருச்சியில் 9,939, திருவள்ளூரில், 9,265, திண்டுக்கல்லில் 8,239, விழுப்புரத்தில் 8,213 பேர் நாய்க்கடியால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பாக பொது சுகாதாரத்துறை அதிகாரிகள் கூறும்போது, "நாய், பூனை, குரங்கு கடித்த காயங்களை முறையாக,கிருமிநாசினி கொண்டு தூய்மைப்படுத்தாமல் இருந்தால் தொற்று ஏற்படும். தடுப்பூசிகளை உரிய நேரத்தில் செலுத்தாமல் இருந்தால் ரேபிஸ் நோய் பரவுவதைத் தடுக்க முடியாது.

ஆழமான காயங்களுக்கு தடுப்பூசியுடன் சேர்த்து, ஆர் ஐஜி எனப்படும் ரேபிஸ் இன்யூனோகுளோபளின் தடுப்பு மருந்து செலுத்தலாம்.

# விஜய் பிரச்சார வாகனத்தின் முன் பைக் சாகசம்: அண்ணா பல்கலை. ஊழியருக்கு ரூ.3,000 அபராதம்



சென்னை: விஜய் பிரச்சார வாகனத்தின் முன் பைக் சாகசத்தில் ஈடுபட்ட அண்ணா பல்கலைக்கழக ஊழியருக்கு போக்குவரத்து போலீஸார் அபராதம் விதித்துள்ளனர்.

தவெக தலைவர் விஜய் சென்னையில் ஆயிரம் விளக்கு, தி.நகர் மற்றும் எழும்பூர் ஆகிய தொகுதிகளில் கடந்த புதன்கிழமை ரோடு ஷோ நடத்தினார். அப்போது ஆயிரக் கணக்கானோர் திரண்டு விஜய்யை வரவேற்றனர். கோட்டூர்புரம் காந்தி மண்டபம் சாலை அருகே விஜய்யின் பிரச்சாரவாகனம் சென்றபோது பைக்கில் சென்ற நபர் ஒருவர் ஹெல்மெட் அணியாமல் இரு கைகளையும் விட்டு விட்டு பைக் சாகசத்தில் ஈடுபட்டார். இது தொடர்பான வீடியோ காட்சிகள் சமூக வலைதளங்களில் வைரலானது. இதுகுறித்து போக்குவரத்து புலனாய்வுப் பிரிவு போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்தனர். இதில் பைக் சாகசத்தில் ஈடுபட்டது சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் அலுவலக உதவியாளராகப் பணியாற்றி வரும் மனோஜ்குமார் என்பது தெரியவந்து.

அவர் மீது ஹெல்மெட் அணியாமல் சென்றது, அதிவேகமாக வாகனத்தை இயக்கியது, உடைந்த நம்பர் பிளேட், ஆவணங்கள் சரியாகவைக்காதது உள்ளிட்ட காரணங்களுக்காகரூ.3,000 அபராதம் விதித்தனர். மேலும் அவரது பைக்கையும் பறிமுதல் செய்தனர்.

# சென்னையில் எல்பிஜி காஸ் தட்டுப்பாடு: கடும் சிரமத்தை சந்திக்கும் ஆட்டோ ஓட்டுநர்கள்



சென்னை: சென்னையில் ஆட்டோ எல்.பி.ஜி எரிவாயு கிடைப்பதில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், ஆட்டோ மற்றும் கால் டாக்ஸி ஓட்டுநர்கள் கடும் சிரமத்தை சந்திக்கின்றனர். பங்க்-குகளில் காஸ் நிரப்ப 6 மணி நேரம் வரை காத்திருக்கும் அவலநிலை ஏற்பட்டுள்ளதாக வேதனை தெரிவித்தனர்.

மத்திய கிழக்கில் நிலவும் போர் பதற்றம் மற்றும் விநியோகச் சங்கிலி பாதிப்பு காரணமாக, எல்.பி.ஜி இறக்குமதி குறைந்துள்ளது. பற்றாக்குறையை சமாளிக்க மாற்றுவழிகளை மத்திய அரசு ஆலோசிக்கிறது.

இதற்கிடையில், வாகனங்ளுக்கான எல்.பி.ஜி, சி.என்.ஜி எரிவாயு கிடைக்காததால், ஓட்டுநர்கள் கடும்சிரமத்தை சந்திக்கின்றனர். சென்னை நகரில் பல்லாயிரக்கணக்கான ஆட்டோக்கள், கால் டாக்சிகள் எல்.பி.ஜி. மற்றும் சி.என்.ஜி எரிவாயுவை பயன்படுத்துகின்றனர். இதுபோல, அதிகரிக்கும் பெட்ரோல்,

டீசல் விலை உயர்வால் பலர் தங்கள் வாகனங்களின் கட்டமைப்பை எல்.பி.ஜி மற்றும் சி.என்.ஜி எரிவாயு மூலம் இயக்கும் வகையில் மாற்றி அமைத்துள்ளனர்.

இந்நிலையில், சென்னையில் ஆட்டோ எல்.பி.ஜி மற்றும் சி.என்.ஜி எரிவாயுக்கு கடந்த சில நாட்களாகவே தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால்,நகரின் முக்கியபகுதிகளான வடபழனி, எழும்பூர், சைதாப்பேட்டை உள்ளிட்ட இடங்களில் உள்ள எரிவாயு நிரப்பும் பங்க்-குகள் மூடப்பட்டுள்ளன.

6 மணி நேரம் காத்திருப்பு

அதேநேரத்தில், திறந்திருக்கும் ஒரு சில பங்க்-குகளில்கூட்டம்அலைமோதுகிறது. கீழ்ப்பாக்கம், மீனம்பாக்கம் உள்பட சில இடங்களில் காஸ்நிரப்புவதற்காக, நெடுந்தொலைவுக்கு வரிசையில்சுமார் 6 மணி நேரம் வரைகாத்திருந்தனர். குறிப்பாக, மீனம்பாக்கத்தில் உள்ள ஒரு பங்க்-கில்காஸ் நிரப்ப சுமார் 3 கி.மீ. வரை ஆட்டோக்கள் அணிவகுத்து நின்றன.

இதுகுறித்து, ஆட்டோ ஓட்டுநர்கள் கூறியதாவது: சென்னையில் கடந்த சில நாட்களாக, எல்பிஜி காஸ் கடும் தட்டுப்பாடு நிலவுகிறது. திறக்கப்பட்டுள்ள சில பங்க்-குகளில், காஸ் நிரப்ப, காலை 6 மணி நேரம் வரை காத்திருக்கும் நிலை உள்ளது. காஸ் நிரப்பவே அதிக நேரம் செலவாவதால், சவாரி செல்வது குறைந்து அன்றாட வருமானம் பாதிக்கப்பட்டுள்ளது.ஒருகிலோஎல்.பி.ஜி காஸ்-ல் 20 கி.மீ. வரை ஆட்டோ ஓடும். ஆனால், ஒரு லிட்டர் பெட்ரோலுக்கு 8 கி.மீ. வரை மட்டுமே செல்லும். இதனால், பெரும் பாலான ஆட்டோக்கள் எல்.பி.ஜி காஸ்-க்கு மாறிவிட்டன. இப்போது 12 கிலோ கொள் ளளவு கொண்ட சிலிண்டர் ஆட்டோவில் பொருத்தப்பட்டுள்ளன.

# “மர்மமாக ஏதும் செய்ய போகிறீர்களா, புரட்சி வெடிக்க போகிறதா?” திமுகவுக்கு சரத்குமார் கேள்வி

விருதுநகர்: மர்மமாக ஏதும் செய்யப் போகிறீர்களா? புரட்சி வெடிக்கப் போகிறதா? என்று திமுகவுக்கு நடிகர் சரத்குமார் கேள்வி எழுப்பினார்.



விருதுநகர் தொகுதியில் போட்டியிடும் அதிமுக வேட்பாளர் வி.ஜி.கணேசனை ஆதரித்து பாண்டியன் நகர் பகுதியில் நடிகரும் பாஜக தேசிய பொதுக்குழு உறுப்பினருமான சரத்குமார் நேற்று வாக்கு சேகரித்தார்.

தொடர்ந்து அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: பிரச்சாரத்துக்கு செல்லும் அனைத்து பகுதிகளிலும் மக்கள் எழுச்சியாக உள்ளதை பார்க்க முடிகிறது. ஆட்சி மாற்றத்தை எதிர்பார்க்கின்றனர். இந்தத் தேர்தலில் வெற்றி உறுதியாக இருக்கும் என்று நம்புகிறேன்.

தொகுதி மறுவரையறையை திமுக எதிர்க்கிறது. எங்களை மீறி செய்தால் விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று ஸ்டாலின் கூறியுள்ளார். 50 ஆண்டுகளுக்கு முன்னாள் இருந்த திமுகவை பார்க்க வேண்டியிருக்கும் என்று கூறியுள்ளார். 50 ஆண்டுகளுக்கு முன்பு திமுக எப்படி இருந்தது என்று ஸ்டாலின் கூறினால் நாங்கள் பாதுகாப்பு கேடயத்தை தயாராக வைத்துக் கொள்வோம். இப்படி ஒரு கடிதத்தை பிரதமருக்கு முதல்வர் எழுதலாமா? போராட்டக் களமாக உருவாக்கி அனுதாப அலையை வீசச் செய்யத்தான் இதுபோன்ற போராட்டம். பொய் பிரச்சாரம் செய்யக் கூடாது.

தமிழகத்தில் தொகுதி எண்ணிக்கை 59 ஆக மாற்றப்படும் என்று கூறியுள்ளார்கள். எம்.பி.க்கள் எண்ணிக்கை குறையவில்லை, இம்மாறுதல் 2029 வரை இருக்காது என்றும் கூறியுள்ளார்கள்.

சீன லைட்டரை பயன்படுத்தக் கூடாது என்று கூறிவிட்டு, அதை பயன்படுத்தி நகலை எரிப்பது நியாயமா? ஜனநாயக நாட்டில் பிரதமருக்கு மிரட்டல் விடுக்கலாமா? மர்மமாக ஏதும் செய்யப்போகிறீர்களா? புரட்சி வெடிக்கப் போகிறதா? அப்படியெனில், தேச ஒற்றுமையை குலைக்கப் போகிறீர்கள். அப்படி என்றால் அது தேசப் பாதுகாப்பு சட்டத்துக்குள் வந்துவிடும்.

ஒற்றுமையை குலைக்கும் செயல்களை திமுக செய்கிறது. நிச்சயம் அதற்கு ஒருகாலம்வரும். தேர்தல் முடிந்தவுடன் இதைப்பற்றி பேசவேண்டியுள்ளது. முக கவர்ச்சி மட்டும் அரசியலுக்கு போதாது. களப்பணியாற்ற வேண்டும்.

41 பேர் இறந்ததற்கு காரணம் விஜய்தான். இறந்தவர்களின் குடும்பத்தினரை அழைத்து துக்கம் விசாரித்தவர் இவர்தான். விஜய் என்பவர் யார்? 10 நாட்களுக்கு அவரைப் பற்றி பேசாமல் இருந்து பாருங்கள். இவ்வாறு அவர் கூறினார்.

# மீன்பிடி தடை காலம் எதிரொலி: தூத்துக்குடியில் மீன்கள் விலை கடும் உயர்வு



தூத்துக்குடி: மீன்பிடி தடை காலம் காரணமாக தூத்துக்குடி மாவட்டத்தில் மீன்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது.

தற்போது மீன்பிடி தடை காலம் என்பதால் தூத்துக்குடி மாவட்டத்தில் விசைப்படகுகள் கடலுக்கு மீன் பிடிக்க செல்லவில்லை. திரேஸ்புரம் நாட்டுப் படகு மீன்பிடி துறைமுகத்தில் இருந்து ஏராளமான நாட்டுப்படகுமீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்கச் சென்றனர். இந்நிலையில் இன்று (ஏப்.18) சனிக்கிழமை என்பதால் மீனவர்கள் கரை திரும்பினர். எனினும், மீன்கள் போதிய அளவில் கிடைக்கவில்லை என நாட்டுப்படகுமீனவர்கள் கவலையுடன் தெரிவித்தனர். மேலும் கோடை வெயில் காரணமாகவும் மீன்களின் வரத்தும் குறைந்து காணப்பட்டது. ஆனால் பள்ளி விடுமுறை நாள் என்பதால் மீன்கள் வாங்க பொதுமக்கள கூட்டம் அலைமோதியது.

இதன் காரணமாக மீன்கள் விலை கடுமையாக உயர்ந்து காணப்பட்டது. 'வஞ்சிரம் மீன்' ஒரு கிலோ 1300 ரூபாய் முதல் 1500 ரூபாய் வரையும், விள மீன், ஊழி மீன், பாறை வகை மீன்கள் கிலோ 500 முதல் 750 ரூபாய் வரையும், 'சாலை மீன்' ஒரு கூடை 2500 ரூபாய் வரைக்கும், 'முண்டக்கண்ணி பாறை' ஒரு கூடை 2000 ரூபாய் வரையும் விற்பனை செய்யப்படுகிறது.

அதேபோல் வங்கனை' ஒரு கூடை 3000 ரூபாய் வரையும், 'நண்டு' ஒரு கிலோ 900 ரூபாய் வரையும், கிழவாலை, சூரை, கேரை ஆகிய வகை மீன்கள் கிலோ 250 ரூபாய் வரையும் விற்பனையாகின. வரத்து குறைந்து காணப்பட்ட நிலையில், மீன்களின் விலை உயர்ந்து காணப்பட்டதால் மீனவர்கள் மகிழ்ச்சி அடைந்தனர். விலையை பொருட்படுத்தாமல் பொதுமக்கள் மீன்களை ஆர்வமுடன் வாங்கிச் சென்றனர்.

மீன்கள் விலை உயர்வு குறித்து மீனவர் ஜெனோபர், மீன்வரத்து குறைவாக இருந்தாலும் வியாபாரத்தில் பாதிப்பில்லை என்றார்.

தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் ஏப்ரல் 16 ஆம் தேதி முதல் ஜூன் 15 ஆம் தேதி வரை கிழக்கு கடல் பகுதியில் வாழும் மீன்களின் இனப் பெருக்கத்திற்காக 61 நாட்கள் மீன்பிடி தடைக்காலம் அமல்படுத்தப்படும். அதன்படி, மீன்பிடி தடைக்காலம் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு நடைமுறைக்கு வந்தது. ஆகையால், மாநிலம் முழுவதும், அனைத்து கடலோர மாவட்டங்களில் உள்ள விசைப்படகுகள் மற்றும் இழுவைப் படகுகளில் மீன்பிடிக்க செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

# நடிகை குஷ்பு வீட்டுக்கு வெடிகுண்டு மிரட்டல்




சென்னை: சாந்தோமில் உள்ள நடிகை குஷ்பு வீட்டில் வெடிகுண்டு வைக்கப்பட்டிருப்பதாக டிஜிபி அலுவலக மின்னஞ்சல் முகவரிக்கு நேற்று மின்னஞ்சல் ஒன்று வந்தது.

தகவலறிந்த உயர் அதிகாரிகள், நடிகை குஷ்பு வீட்டில் சோதனை நடத்தும்படி உத்தரவிட்டனர். இதையடுத்து வெடிகுண்டு கண்டறிந்து அகற்றும் நிபுணர்களும், போலீஸாரும் அங்கு விரைந்து சென்று சோதனை நடத்தினர்.

பல மணி நேரம் நடைபெற்ற சோதனையில், அங்கிருந்து எந்த வெடிப்பொருளும் கண்டெடுக்கப்படவில்லை. இது வெறும்புரளி எனதெரியவந்தது. இது தொடர்பாக சைபர் க்ரைம் போலீஸார் வழக்கு பதிந்து விசாரிக்கின்றனர். 2 நாட்களுக்கு முன்பு நடிகை திரிஷா வீட்டுக்கு இதே போல்வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.



# ஈரோட்டில் பல்லுயிர் பாரம்பரியத்தலம் பாதிப்பு: உடனடி நடவடிக்கை தேவை

ஈரோடு மாவட்டத்திலுள்ள பல்லுயிர் பாரம்பரியத் தலமான எலத்தூர் குளம், சிலர் சட்டவிரோதமாக மீன் பிடித்தல், பறவைகளை வேட்டையாடுதலில் ஈடுபடுவதன் காரணமாகச் சுற்றுசூழல் சீரழிவுக்கு ஆளாகியுள்ளது. அந்த பாதிப்பில் இருந்து இப்பகுதியை மீட்க உடனடி நடவடிக்கைகள் தேவை என்று அவ்வட்டாரத்தில் வசிப்பவர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

ஈரோடு மாவட்டத்தில் உள்ள எலத்தூர் குளம், கடந்த 2025 செப்டம்பர் மாதம் தமிழ்நாடு அரசால் மாநிலத்தின் மூன்றாவது பல்லுயிர் பாரம்பரியத்தலமாக அறிவிக்கப்பட்டது. இது ஈரோடு மாவட்டத்தின் முதல் பல்லுயிர் பாரம்பரியத்தலமான இப்பகுதியில் 200-க்கும் மேற்பட்ட பறவை வகைகள், 695க்கும் மேற்பட்ட உயிரினங்கள் வாழ்வதாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், வலசை காலங்களில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பறவைகள் தங்குவதும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு தொடக்கத்தில், எலத்தூர் குளம் பகுதியில் பறவைகள் வேட்டை, மீன்பிடித் தடையை மீறிச் சட்டவிரோத நடவடிக்கைகள் அதிகரித்திருந்தது சுற்றுச்சூழல் பாதுகாப்பு குழுக்களால் அரசின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. இதையடுத்து, தமிழ்நாடு வனத்துறை தற்காலிக வேட்டை தடுப்புப் பாதுகாவலரை அங்கு நியமித்தது. மேலும், எலத்தூர் பல்லுயிர் மேலாண்மைக்குழு மற்றும் எலத்தூர் பேரூராட்சி இணைந்து தேசிய அளவில் முக்கியத்துவம் வாய்ந்த இந்த வாழ்விடத்தைக் காப்பாற்றும் பணியில் ஈடுபட்டிருந்தது.

கடந்த ஏப்ரல் 9ஆம் தேதி, வனத்துறையால் தற்காலிகமாகப் பணியமர்த்தப்பட்ட வேட்டை தடுப்புப் பாதுகாவலரின் பணி நிறுத்தப்பட்டது. அந்தத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு முடிவடைந்ததே அதற்குக் காரணமென்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதன் பின்னர், மீண்டும் வேட்டையும் மீன்பிடியும் அதிகமாகத் தொடங்கியுள்ளது.

கோடை காலம் தொடங்கியுள்ளதால், குளத்தின் நீர் குறைந்துள்ளது. இதனால் பறவைகள் குறிப்பிட்ட இடங்களில் மட்டுமே தங்குகின்றன. குளத்தில் பரவலாகத் தரையில் கூடமைக்கும் பறவைகளும் மரத்தில் கூடமைக்கும் பறவைகளும் இனப்பெருக்கம் செய்து வருகின்றன.

கடந்த நான்கு நாட்களாக, அனுமதியின்றிச் சில நபர்கள் குளத்திற்குள் இறங்கி வலை விரித்து மீன் பிடிப்பதும் பறவைகளை வேட்டையாடுவதும் அதிகரித்துள்ளது. சிலர் குழுவாக இரவில் மது அருந்திவிட்டு மீன்கள், பறவைகளை வேட்டையாடி அங்கேயே சமைத்துச் சாப்பிடுகின்றனர். குடிநீர்தொட்டியில் மீன்களை சுத்தப்படுத்துவதால், மக்கள் பயன்படுத்தும் குடிநீர் வீணடிக்கப்படுகிறது.

மீன்பிடித் தடையை மீறி வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடிப்பவர்களால் நிறைய மீன்கள் சேற்றில் சிக்கி இறக்கின்றன. வலையில் பிடிபட்டசீமைமீசைகெழுத்தி (African catfish) போன்ற உணவுக்குப் பயன்படாத மீன்களைக் கொன்று குளத்தில் வீசிச் செல்வதால் துர்நாற்றம், நோய் தொற்று அபாயம் ஏற்பட்டுள்ளது. மேலும், மீன்பிடித்தலுக்கு இடையூறாக இருக்கும் நீர்வாழ் பாம்புகள், பறவைகளைக் கொல்வதும் நிகழ்கின்றன.

இதன் காரணமாக, பல ஆண்டுகளாகக் குளத்தைப் பாதுகாத்துவந்த சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், உள்ளூர் மக்களிடையே கடும் அதிருப்தி நிலவி வருகிறது. ஆதலால், அரசு உடனடியாகத் தலையிட்டுச் சட்டம் ஒழுங்கு, சுற்றுச்சூழல் சீர்கேடுகளைச் சரி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். "எலத்தூர், நாகமலை குன்று பல்லுயிர்பாரம்பரியத்தலங்களில் நிரந்தர வேட்டை தடுப்புப் பாதுகாவலர்கள் நியமிக்கப்பட வேண்டும். தற்போது குளத்தில் இறந்துகிடக்கும் மீன்கள் எலத்தூர் பேரூராட்சியால் உடனடியாக அகற்றப்பட வேண்டும். இறந்த மீன்களைத் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் உரமாக்கிப் பயன்படுத்தும் வாய்ப்பையும் பரிசீலிக்கலாம்.

இங்கு சட்டவிரோதமாக மேற்கொள்ளப்படும்பறவைகள் வேட்டை, மீன்பிடித்தலைக் கட்டுப்படுத்த வனத்துறை மற்றும் பேரூராட்சி செயல் அலுவலர்கள், ஊழியர்கள் மூலம் அரசு உறுதியான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். இரவு நேரங்களில் குளத்தில் மது அருந்திவிட்டுத் தங்குவதைத் தவிர்க்கக் காவல்துறை கடுமையான கண்காணிப்பு மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

பல்லுயிர் பாரம்பரியத்தலமாக அறிவிப்பு வெளியாகி ஆறு மாதங்கள் கடந்தும், இங்கு அது தொடர்பான பெயர்ப்பலகை வைக்கப்படவில்லை எனவும், இது தொடர்பாக அரசு விரைவில் நடவடிக்கைகளைக் கையாள வேண்டும் எனவும் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# 'ராமாயணம்' குறித்து சர்ச்சை கருத்து; ரூ.100 கோடி நஷ்டஈடு கேட்டு வழக்கு தொடரப்படும் என நடிகர் பிரகாஷ் ராஜுக்கு எச்சரிக்கை



ஹைதராபாத்: 'ராமாயணம்' குறித்த சர்ச்சை கருத்துகளை கூறியதாக நடிகர் பிரகாஷ் ராஜுக்கு ரூ. 100 கோடி நஷ்டஈடு கேட்டு வழக்குதொடரப்படும் என்று எச்சரிக்கை நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

கேரளா இலக்கிய விழாவில் பங்கேற்று பேசிய நடிகர் பிரகாஷ் ராஜ், ராமரும் லட்சுமணனும் வடஇந்தியாவில் இருந்து வந்து தென்னிந்தியாவில், குறிப்பாக இலங்கையில் போர் தொடுத்ததாக கூறியிருந்தார். பிரகாஷ் ராஜின் இந்த பேச்சானது இந்துக்களின் மத உணர்வுகளை புண்படுத்துவதாகவும், இதிகாசத்தை திரித்துகூறும் வகையில் அமைந்திருப்பதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்தன.

இதனையடுத்து திருமலை திருப்பதி தேவஸ்தான அறங்காவலர் குழு உறுப்பினர்களில் ஒருவரான பானு பிரகாஷ் ரெட்டி என்பவர் சார்பில் பிரகாஷ் ராஜுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. பானு பிரகாஷின் வழக்கறிஞர் கோத்தப்பள்ளி அஜய் குமார் அனுப்பியுள்ள அந்த நோட்டீஸில், "ராமரும் லட்சுமணரும் வட இந்தியாவிலிருந்து வந்து தென்னிந்தியாவில் போர் தொடுத்ததாக நடிகர் பிரகாஷ் ராஜ் பேசியிருந்தார். அவருடைய இந்த பேச்சு ராமாயணத்தை திரித்து கூறும் வகையில் அமைந்திருக்கிறது. மேலும் இந்துக்களின் நம்பிக்கையை புண்படுத்தும் விதத்திலும் அமைந்திருக்கிறது.

இதுபோன்ற கருத்துகள் மக்களிடையே பிரிவினையை தூண்டுவதாக இருப்பதுடன், ஆரிய - திராவிட' பிரச்சனைக்கு வழிவகுப்பதாகவும் இருக்கிறது. மக்கள் மத்தியில் பிரபலமானவர்கள், கலாச்சாரரீதியாககருத்துகளை பதிவு செய்யும்போது மிகுந்த பொறுப்புணர்வுடன் நடந்துகொள்ள வேண்டும்" என்று குறிப்பிட்டிருந்தார்.

மேலும், "பாரதிய நியாய சன்ஹிதாசட்டப்பிரிவுகளான 299,196 மற்றும் 356 ஆகியவற்றின்கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அந்த நோட்டீஸில் கூறப்பட்டுள்ள நிலையில், செய்தித்தாள்கள் மற்றும் ஊடகங்கள் வாயிலாக அவர் 7 நாட்களுக்குள் நிபந்தனையற்ற மன்னிப்பு கேட்க வேண்டுமெனவும் கூறப்பட்டுள்ளது. அது மட்டுமல்லாமல், பிரகாஷ் ராஜ் எதிர்காலத்தில் இதுபோன்ற கருத்துகளை கூறுவதை தவிர்க்க வேண்டும்" எனவும் அந்த நோட்டீஸில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக, "7 நாட்களுக்குள் அவர் மன்னிப்பு கேட்கத் தவறினால், ரூ. 100 கோடி நஷ்டஈடு கேட்டு, அவர் மீது அவதூறு வழக்கு தொடரப்படும் என்பதோடு, உரிமையியல் மற்றும் குற்றவியல் ரீதியான சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்படும்" என்று அந்த நோட்டீஸில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இருப்பினும், திருப்பதி தேவஸ்தான அறங்காவலர் குழு உறுப்பினரின் இந்த நோட்டீஸுக்கு பிரகாஷ் ராஜ் தரப்பிலிருந்து இதுவரை எந்த விளக்கமும் அளிக்கப்படவில்லை.

# தாம்பரம் அருகே உரிய ஆவணங்களின்றி கொண்டு செல்லப்பட்ட ரூ. 1.02 கோடி பறிமுதல்



சென்னை: தாம்பரம் அருகே செம்பாக்கத்தில் உரிய ஆவணம் இன்றி கொண்டு செல்லப்பட்ட ஒரு கோடியே 2 லட்சம் ரூபாய் பணம் தேர்தல் பறக்கும் படையினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் வரும் 23 ஆம் தேதி சட்டமன்ற தேர்தல் நடைபெறவிருக்கிறது. இதனையொட்டி தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டதிலிருந்தே மாநிலம் முழுவதும் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் உள்ளன. எனவே தேர்தல் காலத்தில் பண பட்டுவாடா நடைபெறாமல் தடுப்பதற்காக தமிழ்நாடு முழுவதும் தேர்தல் பறக்கும் படைகள், துப்பாக்கி ஏந்திய ரிசர்வ் படையின் உதவியுடன் தீவிர வாகன சோதனைகளில் ஈடுபட்டு வருகின்றன. மேலும் முக்கிய சாலைகள், ரயில் நிலையம், விமான நிலையம், பேருந்து நிலையம் உள்ளிட்ட மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதிகளிலும் தேர்தல் பறக்கும் படை குழுவினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்தவகையில் தாம்பரம் தேர்தல் பறக்கும் படை அதிகாரி தினேஷ் தலைமையிலான குழுவினர், வேளச்சேரி சாலையில், செம்பாக்கம் பகுதியில் உள்ள தனியார் பள்ளி அருகே வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அந்த வழியாக சந்தேகத்திற்கிடமாக வந்த வேன் ஒன்றை மடக்கி அதிகாரிகள் சோதனை மேற்கொண்டனர். சோதனையில் வேனில் கட்டுக்கட்டாக பணம் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

பணத்தை பறிமுதல் செய்த பறக்கும் படை அதிகாரிகள் அதை தாம்பரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் ஒப்படைத்தனர். அங்கு வருவாய் கோட்டாட்சியர் முரளி, வட்டாட்சியர் நடராஜ், சேலையூர் ஆய்வாளர் டில்லி பாபு ஆகியோர் முன்னிலையில் பணத்தை வேனில் கொண்டு வந்த ராஜேஷ் (30), கபிலன் (42) ஆகியோரிடம் அது குறித்து விசாரணை நடத்தப்பட்டது.

அப்போது அவர்கள் அரசு மதுபானக் கடைகளில் இருந்து வசூல் செய்த பணத்தை அம்பத்தூர் கொண்டு செல்வதாக தெரிவித்தனர். அதிகாரிகள் அந்த பணத்தை எண்ணிப் பார்த்த போது அதில் ஒரு கோடியே 2 லட்சத்து 60 ஆயிரத்து 717 ரூபாய் இருந்தது தெரிய வந்தது.

ஆனால் பணத்திற்கான எந்த ஆவணமும் இல்லாததாலும், பணத்தைக் கொண்டு வந்த இருவரும் தெரிவித்த தகவல்களில் முரண்பாடுகள் இருந்ததாலும் பணத்தை பறிமுதல் செய்த அதிகாரிகள் வருமான வரித்துறை அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்து அவர்களிடம் பணத்தையும், பணத்தை கொண்டு வந்த இருவரையும் ஒப்படைத்தனர். தொடர்ந்து வருமான வரித் துறையினர் பவிசாரணை நடத்தி வருகின்றனர்.

# டிஜிட்டல் கைது மோசடி மூதாட்டியிடம் ரூ.26 லட்சம் பறிப்பு




போபால்: மத்திய பிரதேசமாநிலம் போபாலை சேர்ந்தவர் அருணா சின்சோல்கர் (64). இவரை கடந்த ஆண்டு நவம்பரில் வாட்ஸ் அப் மூலம் தொடர்பு கொண்ட நபர்கள், தீவிரவாத தடுப்புப் படையிலிருந்து பேசுவதாக மிரட்டி அவரை டிஜிட்டல் கைது செய்தனர்.

பின்னர் மிரட்டி அவரது வங்கிக் கணக்கிலிருந்து ரூ.26.65 லட்சத்தை வேறு கணக்குகளுக்கு மாற்றியுள்ளனர். சம்பவம் நடந்து சில மாதங்களுக்கு பின்னர், தான் ஏமாற்றப்பட்டது அருணாவுக்குத் தெரியவந்தது. இதையடுத்து அவர் போபால் சைபர் கிரைம் போலீஸில் புகார் கொடுத்தார்.

இந்த வழக்கை தாமாக முன்வந்து விசாரித்த உச்ச நீதிமன்றம், வழக்கை சிபிஐ வசம் ஒப்படைக்க உத்தரவிட்டது. அதன்படி சிபிஐ அதிகாரிகள் எப்ஐஆர் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# ஆந்திராவில் லேசான நில நடுக்கம்




அனகாபல்லி: ஆந்திர மாநிலம், அன காபல்லி மாவட்டத்தில் நேற்று முன் தினம் நள் ளிரவு 12.05 மணிக்கு திடீரென லேசான நில நடுக்கம் ஏற்பட்டது. இதனால் மக்கள் பீதி அடைந்தனர்.

இந்த மாவட்டத்தில் ராம்பில்லி, எடமஞ்சிலி, கோட்ட ஊரட்லா ஆகிய பகுதிகளில் நில நடுக்கத்தை மக்கள் உணர்ந்தனர். ரிக்டர் அளவு 3.7 ஆக பதிவாகி உள்ளது. நில நடுக்கத்தை உணர்ந்ததும் பயந்து போய் மக்கள் வீடுகளை விட்டு வெளியே ஓடி வந்தனர்.

நில நடுக்கம் மீண்டும் ஏற்படும் என்ற பயத்தில் இரவு முழுவதும் மக்கள் தூங்காமல் பயத்தில் சாலைகளிலேயே கழித்தனர். பின்னர் அதிகாலை வேளையில் பயம் தெளிந்து அவரவர் வீடுகளுக்கு சென்றனர்.

# ஆசியாவின் பெரும் பணக்காரர் பட்டியலில் முதலிடத்துக்கு முன்னேறினார் கவுதம் அதானி



புதுடெல்லி: ஆசியாவின் பெரும் பணக்காரர் வரிசையில் முதலிடத்துக்கு தொழிலதிபர் கவுதம் அதானி முன்னேறியுள்ளார்.

புளூம்பெர்க் பில்லியனர் இன்டெக்ஸ் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, முதல் இடத்தில் நீண்ட காலமாக இருந்து வந்த முகேஷ் அம்பானியை பின்னுக்குத்தள்ளி கவுதம் அதானி தற்போது ஆசியாவின் மிகப்பெரிய பணக்காரராக உயர்ந்துள்ளார்.

கவுதம் அதானியின் நிகர சொத்து மதிப்பு 92.6 பில்லியன் அமெரிக்க டாலர்களைத் தொட்டுள்ளது. இதன் மூலம் ஆசிய அளவில் முதலிடத்தையும், உலக அளவில் அவர் 19-வது இடத்தையும் பெற்றுள்ளார். அதே நேரத்தில் முகேஷ் அம்பானியின் சொத்து மதிப்பு 90.8 பில்லியன் டாலராக உள்ளது. இதனால் அவர் ஆசியாவில் 2-வது இடத்திலும், உலக அளவில் 20 - வது இடத்துக்கும் சரிந்துள்ளார். வித்தியாசம் மிகக் குறைவு என்றாலும், இந்த மாற்றம் சந்தையின் தாக்கத்தை தெளிவாக காட்டியுள்ளது. கவுதம் அதானியின் சொத்து மதிப்பு இந்த ஆண்டு மட்டும் 8.1 பில்லியன் டாலர்கள் அதிகரித்துள்ளது. இந்த வளர்ச்சிக்கு அவரது குழும நிறுவனங்களின் பங்குச்சந்தை செயல்பாடு முக்கியப் பங்கு வகிக்கிறது. சந்தையில் சரிவு ஏற்பட்ட நாட்களில் கூட அதானி குழும நிறுவனப் பங்குகள் சிறப்பான முன்னேற்றத்தில் உள்ளது.

# காற்றழுத்த தாழ்வுப்பாதை நீடிப்பு தமிழகத்தில் சில இடங்களில் மழை: வெப்பமும் அதிகரிக்கும்



சென்னை: தமிழகத்தில் வெப்ப சலனம் காரணமாக ஒருசில இடங்களில் நேற்று மழை பெய்துள்ள நிலையில், 3 மாவட்டங்களில் 104 டிகிரி வெயில் கொளுத்தியது. இதையடுத்து, படிப்படியாக வெப்பநிலை அதிகரிக்கும். காற்றழுத்த தாழ்வுப்பாதை காரணமாக சில இடங்களில் லேசான மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது

தமிழகத்தில் நீடித்து வரும் வறண்ட வானிலை காரணமாக ஏற்பட்ட வெப்ப சலனம் காரணமாக மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், ராமநாதபுரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மழை பெய்துள்ளது. பிற தமிழகம் மற்றும் புதுச்சேரியில் வானிலை நிலவியது. அதன் காரணமாக ஈரோடு, கரூர், சேலம் மாவட்டங்களில் நேற்று 104 டிகிரி வெயில் கொளுத்தியது.

மேலும், வேலூர், திருச்சி, கோவை, தர்மபுரி, மதுரை மாவட்டங்களில் 102 டிகிரி வெயில் நிலவியது. வெப்பநிலை இயல்பைவிட 2-4 டிகிரி செல்சியஸ் வரையில் வெப்பம் அதிகரித்து காணப்பட்டது. இந்நிலையில், வளி மண்டலத்தில் சுமார் 0.9 கிமீ உயரத்தில் மரத்வாடா முதல் மன்னார் வளைகுடா வரை உள் கர்நாடகா, ராயலசீமா மற்றும் தமிழகம் வழியாக ஒரு வளிண்டல காற்றழுத்த தாழ்வுப் பாதை நிலை கொண்டுள்ளது.

இதையடுத்து, மேற்கு தொடர்ச்சி மலை, டெல்டா மாவட்டங்களின் கடலோரப் பகுதிகள், ராமநாதபுரம் மாவட்டத்தில் ஓரிரு இடங்களிலும் லேசான மழை நேற்று பெய்தது. இதேநிலை 23ம் தேதி வரையில் நீடிக்கும். இன்றும், நாளையும் உள் தமிழக மாவட்டங்களில் அதிகபட்ச வெப்பநிலையில் குறிப்பிடத்தக்க மாற்றத்துக்கான வாய்ப்பு குறைவு. தமிழ்நாடு அரசியல் எனினும் படிப்படியாக வெப்பநிலை உயரும். இயல்பு நிலையை விட 4 டிகிரி செல்சியஸ் வரையில் வெப்பநிலை அதிகரித்து காணப்படும். அதன் காரணமாக சில இடங்களில் அசவுகரியம் ஏற்படவும் வாய்ப்புள்ளது. சென்னையில் இயல்புநிலையை ஒட்டியே வெயில் நிலவும். சில இடங்களில் அசவுகரியம் ஏற்படலாம்.

# ஏப்.22க்குள் உடன்பாடு எட்டப்படாவிட்டால் ஈரான் போர் நிறுத்தம் முடிவுக்கு வரும்: அமெரிக்க அதிபர் ட்ரம்ப் கெடு



மேரிலாந்து: எதிர்வரும் 22-ம் தேதிக்குள் உடன்பாடு எட்டப்படவில்லை என்றால் ஈரான் உடனான போர் நிறுத்தம் முடிவுக்கு வரக்கூடும் என அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

கடந்த பிப்.28-ம் தேதி ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் படைகள் தாக்குதல் மேற்கொண்டன. இதற்கு பதிலடி தரும் வகையில் இஸ்ரேல் மற்றும் வளைகுடாவில் உள்ள அமெரிக்காவின் நேச நாடுகள் மீது ஈரான் தாக்குதல் மேற்கொண்டது. இந்தச் சூழலில் கடந்த 8-ம் தேதி அமெரிக்காவும், ஈரானும் இரண்டு வார கால இடைக்கால போர் நிறுத்தத்துக்கு சம்மதம் தெரிவித்தன.

இரண்டு தரப்புக்கும் இடையில் பாகிஸ்தான் மத்தியஸ்தம் செய்ததாக தெரிவிக்கப்பட்டது. அதையடுத்து ஏப்.11 அன்று அமைதிப் பேச்சுவார்த்தை தொடங்கியது. இதில் அமெரிக்கா தரப்பில் துணை அதிபர் ஜே.டி. வான்ஸ் மற்றும் ஈரான் நாடாளுமன்ற சபாநாயகர் கால்பா:ப் ஆகியோர் பங்கேற்றனர். இந்தப் பேச்சுவார்த்தை தோல்வி அடைந்தது. தொடர்ந்து அமெரிக்க கடற்படைக்கு சொந்தமான கப்பல்கள் ஹார்முஸ் ஜலசந்தியை முடக்கும் நோக்கில் செயல்பட்டன. இதனால் மேற்காசியாவில் மீண்டும் போர் பதற்றம் ஏற்பட்டது.

இஸ்ரேல் - லெபனான் போர் நிறுத்தம் அமலான காரணத்தால் ஹார்முஸ் ஜலசந்தியை கப்பல் போக்குவரத்துக்கு திறப்பதாக ஈரான் தெரிவித்துள்ளது. இருப்பினும் ஹார்முஸ் ஜலசந்தியை அமெரிக்கா முடக்க கூடாது என ஈரான் கூறியுள்ளது. அமெரிக்கா - ஈரான் இடையே விரைவில் இரண்டாவது கட்ட அமைதிப் பேச்சுவார்த்தை தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வரும் 22-ம் தேதியுடன் அமெரிக்கா மற்றும் ஈரான் இடையிலான இடைக்கால போர் நிறுத்தம் முடிவுக்கு வருகிறது. இந்நிலையில், 'போர் நிறுத்தம் நீட்டிக்கப்படுமா?' என செய்தியாளர் சந்திப்பில் முன்வைக்கப்பட்ட கேள்விக்கு ட்ரம்ப் பதில் அளித்துள்ளார். வரும் புதன்கிழமைக்குள் (ஏப்.22) ஈரான் உடனான பேச்சுவார்த்தையில் சுமுக உடன்பாடு எட்டப்பட்டு, ஒப்பந்தம் கையெழுத்தாக வேண்டும். அப்படி நடக்காத பட்சத்தில் இந்த இடைக்கால போர்நிறுத்தம் முடிவுக்கு வரும். மீண்டும் குண்டுகளை வீச வேண்டி இருக்கும். போர் நிறுத்தம் நீட்டிக்கப்பட வாய்ப்பில்லை என ட்ரம்ப் தெரிவித்தார்.

அதே நேரத்தில் ஈரான் உடனான திரை மறைவு பேச்சுவார்த்தையில் நல்ல முன்னேற்றம் இருப்பதாகவும், விரைவில் நல்ல செய்தி வரும் என்றும் அமெரிக்க அரசு தரப்பு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

# Cabinet okays 2 per cent DA hike for central government employees



The Union Cabinet on Saturday approved a 2 per cent increase in Dearness Allowance (DA) for central government employees. The decision, finalised during a Cabinet meeting, raises the allowance from 58 per cent to 60 per cent.

The adjustment addresses the long-standing wait by the work force for a revision to their compensation structure. The 2 per cent hike also applies to Dearness Relief (DR) for pensioners, which similarly increases from 58 per cent to 60 per cent.

According to a cabinet release, the hike will be applicable from January 1 of this year, meaning central government employees and pensioners will be in for some arrear pay. The government has earmarked an additional Rs. 6,791 crore in annual hits due to this decision.

The hike, aied at offsetting the impact of inflation, was sought to benefit approximately 49.19 lakh central government employees and 68.72 lakh pensioners.

What is the Dearness Allowance? The Dearness Allowance is a fundamental cost-of-living adjustment designed to support government employees and pensioners. It specifically offsets the impact of inflation on fixed incomes. The allowance is calculated as a percentage of the basic pay and undergoes periodic revisions based on established inflation indices to maintain the purchasing power of the workforce.

The allowance, linked to inflation, is revised twice a year, typically in January and July. It is worked out based on the Consumer Price Index for Industrial Workers (CPI-IW), released monthly by the Labour Bureau under the Labour Ministry. The Union Cabinet, chaired by Prime Minister Narendra Modi, had last approved a 3 per cent increase in Dearness Allowance for Central Government employees and Dearness Relief for pensioners in October 2025, with the decision going into a backdated effect from July 1, 2025. The decision raised the then-existing rate from 55 per cent to 58 per cent of the basic pay or pension, according to a Cabinet release. The total financial implication of the decision on the exchequer was estimated at 10,083.96 crore annually.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.